[30th March 1965

ரிப்போர்ட்டை அரசாங்கத்திற்கு சமர்ப்பித்திருக்கிறார்கள். இனியும் காலதாமதம் செய்து கொண்டுபோக என்ன காரணம் என்று கூறமுடியுமா ?

கனம் திரு. வெ. ராமையா : காலதாமதப்படுத்தவில்லை. இதிலுள்ள பல்வேறு சிக்கல்களை ரெவின்யூ போர்ட், லா டிப்பார்ட்மென்ட், மற்ற டிப்பார்ட்மென்ட்ஸ் பரிசீலனை செய்யவேண்டும். அதைச் செய்து கொண்டிருக்கிறார்கள். விரைவில் ஒரு முடிவு ஏற்படும்.

தஞ்சை மாவட்டத்தில் தீவிரச் சாகுபடித் திட்டம்

* 373 கேள்வி.—புலவர் கா. கோவிந்தன் : கனம் உணவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) தீவிர சாகுபடித் திட்டம் நடைமுறையிலிருக்கும் தஞ்சை மாவட்டத்தில் சுற்றுப்பயணம் செய்த அமெரிக்க நிபுணர் குழு, அங்கு அத்திட்டம் சரிவர செயல்படவில்லை என்றும், நிலச் சீர்திருத்தச் சட்டங்கள், அங்கு சிறிதும் செயல்படாமையே அதற்குக் காரணம் என்றும் கருத்தறிவித்தது அரசாங்கத்தின் கவனத்திற்கு வந்ததா ?

(இ) ஆம் எனில், அதன் மீது எடுத்துக் கொண்ட நடவடிக்கை என்ன ?

THE HON. SRI V. RAMAIAH : (*a*) The Member is presumably referring to the report of Mr. Wolf Ladijinsky of the Ford Foundation on the tenurial conditions and their impact on the Package Programme in the Thanjavur district. The report was received by the Government.

(*b*) The report was examined in detail. The attention of the Member is invited to the Press Note No. 20, dated 1st September 1964, which contains the views of the Government on the report.

Report of Expert Team of Ford Foundation

* 374 *Q.*—SRI M. KALYANASUNDARAM :
SRI C. CHIRANJEEVULU NAIDU : } Will the Hon. the Minister for Food be pleased to state—

(*a*) whether the Government are in receipt of the report of the Expert Team of Ford Foundation headed by Mr. Wolg Ladijinsky on the Package Programme in Thanjavur district; and

(*b*) whether a copy of the same would be placed on the table of the House ?

THE HON. SRI V. RAMAIAH : (*a*) Yes, Sir. But the report was by Mr. Wolf Ladijinsky only and not by any team of experts.

(*b*) The Government consider that it will not be in the public interest to do so.

30th March 1965]

திரு. கே. ஏ. மதியழகன் : இந்த நிபுணர் தன் அறிக்கையில் தஞ்சை ஜில்லாவில் இருக்கிற நிலச் சொந்தக்காரர்கள், மிராசு தாரர்கள், நகத்தில் கூட சேறு படக்கூடாது என்று ஜமீந்தார் களைப் போல் இருக்கிறார்கள், '60', '40' முறை எல்லாம் அங்கு சரியாக அமுலாகவில்லை, இது வெறும் பேப்பர் லெஜிஸ்லேஷன் தான், ஏட்டுச் சுரக்காய் போன்றுதான் இருக்கிறது என்ற விவ ரங்களை குறிப்பிட்டிருக்கிறார்கள். அந்த விவரங்கள் பற்றி என்ன சமாதானம் சொல்கிறார்கள் அமைச்சர் அவர்கள்?

கனம் திரு. வெ. ராமையா : இந்த சபையில் நான் சமாதானம் சொல்வதை விட அங்கத்தினர் அவர்கள் அந்த அறிக்கையை கவனமாகப் படித்துப் பார்த்தால் தமிழ் நாட்டிலுள்ள நிலையை நன்கு புரிந்து கொள்ள முடியும். நிபுணர் என்ற அடிப்படையில் இங்கு வந்து தஞ்சாவூரில் ஒரு சில கிராமங்களைப் போய் பார்த்து அங்கு விசாரித்து அதற்கு மேல் விவரங்களை சேகரம் செய்ய முயற்சி எடுக்காமல் அவசரமான ஒரு முடிவுக்கு வந்திருக் கிறார்கள். அந்த அறிக்கை அரசாங்கத்திற்கு கிடைத்தவுடன் இதிலுள்ள நிலைமை எப்படி எப்படி யிருக்கிறது என்றெல்லாம் நம் ராஜ்ய அதிகாரிகள் நம் ராஜ்ய நிலைமைக்கு ஏற்ப பரிசிலனை செய்து, இந்த ஜில்லாவில் அந்த நிபுணர் இன்னும் கொஞ்ச நாட்கள் தங்கி சம்பந்தப்பட்டவர்களிடம் முறையாக நல்லபடி பேசியிருக்கும்பட்சத்தில் இந்த அவசரமான முடிவிற்கு வந்திருக்க முடியாது என்ற கருத்தை எந்த ப்ளானிங் கமிஷன் அனுப்பியதோ, அவர்களிடம் சொல்லும்போது நாம் கொடுத்திருக்கிற விவரங்களை வைத்து அவர்கள் அவசரமான முடிவிற்கு வந்துவிட்டார்கள் என்ற கருத்தை அவர்களும் ஒப்புக் கொள்கிறார்கள்.

திரு. ஆ. கு. சுப்பையா : ஸார், தஞ்சாவூர் மாவட்டத்தில் தீவிர சாகுபடி திட்டத்தின்கீழ் குத்தகைத்தாரர்களுக்கும் சில சலுகை கள் கொடுக்கப்பட்டு வருகின்றன. பல குத்தகைத்தாரர்களும் வாய் நம்பிக்கையின் பேரில் நிலத்தை சாகுபடி செய்து வருகிறார்கள். ஆகவே, இம்மாதிரிப்பட்ட குத்தகைத்தாரர்களுக்கு கட்டாயமாக சலுகைகள் கொடுப்பதற்குரியவகையில் அங்கீகரிக்க சர்க்கார் ஏற்பாடு செய்யுமா? 9-30 a.m.

கனம் திரு. வெ. ராமையா : முன்புதான் இதில் வேறுபாடு இருந்தது. இப்போது நாம் செய்திருக்கிற முடிவின்படி எல்லா குத்தகைதாரர்களுக்கும், அவர்கள் ஒப்பந்தம், முச்சலிக்கை, வாய் ஒப்பந்தம் எதுவாக இருந்தாலும் கடன் கொடுக்கவேண்டும் என்று அரசாங்கம் முடிவு செய்திருக்கிறது.

SRI C. CHIRANJEEVULU NAIDU : Sir, is it the view of the Government that the Officers did not properly furnish the particulars required by the Expert Committee?

THE HON. SRI V. RAMAIAH : The Expert or the gentleman, who came, made a visit to certain villages and collected the information. Normally sitting with the local officers and having discussion with them, he came to his own conclusion and furnished the particulars.

திரு. டீ. கலியாணசுந்தரம்: இந்த நிபுணர் நமது ராஜ்ய அமைச்சர்களைச் சந்தித்தார்களா? அப்படி சந்தித்திருந்தால் என்னனென்ன விசாரித்தார்கள்?

கனம் திரு. வெ. ராமைய்யா: தஞ்சை ஜில்லாவிலுள்ள கலக்டரைக்கூட அவர் சந்திக்கவில்லை. அந்த நிலைமையில் அவர் எப்படி அமைச்சர்களைச் சந்தித்திருக்க முடியும்?

DR. B. NATARAJAN: Sir, was it a single man team or a multi-member team?

THE HON. SRI V. RAMAIAH: There was no team at all. There was only one Expert.

திரு. எம். எஸ். செல்வராஜன்: சார், தீவிர சாகுபடித் திட்டத்தின்கீழ், வழங்கப்பட்ட முழுக்கடன் உதவியில் எத்தனை சதவிகிதம் பயன்படுத்தப்படாமல் திரும்பப்பெறப்பட்டிருக்கிறது?

கனம் திரு. வெ. ராமைய்யா: தனியாக கேள்வி வேண்டும்.

திரு. கோ. சி. மணி: தலைவர் அவர்களே, இந்த அமெரிக்கக் குழு அளித்த ரிப்போர்ட்டுக்கு பதில் அளிக்கும் வகையில், இங்குள்ள நில சீர்திருத்தம் நல்லமுறையில் செயல்பட்டுவருகிறது என்றும், அதை நிரூபிக்கின்ற வகையில் உபரி நிலமாக தஞ்சை ஜில்லாவில் சுமார் 26 ஆயிரம் சொச்சம் ஏக்கர் கிடைக்கும் என்று ரெவின்யூ போர்ட் தெரிவித்ததே, அது அமைச்சர் அவர்களுக்குத் தெரியுமா?

கனம் திரு. வெ. ராமைய்யா: ரெவின்யூ போர்ட் நன்றாக பரிசிலனை செய்து, அந்த நிபுணர் ஒரு ஏக்கர் நிலம்கூட உபரியாக கிடைக்காது என்று சொன்னதை அங்குள்ள "ஆதரைஸ்ட் ஆபீசர்" கொடுக்கின்ற விவரங்களையும் பரிசிலனை செய்து தஞ்சை ஜில்லாவில் சுமார் 26 ஆயிரம் ஏக்கர் நிலம் கிடைக்கக்கூடிய சூழ்நிலை இருக்கிறது என்று போர்ட் கருதியது. அந்த விவரங்களுக்குள்ளும் இப்போது ஆதரைஸ்ட் ஆபீஸர் போய்க்கொண்டிருக்கிறார்கள்.

புலவர் கா. கோவிந்தன்: அந்த அமெரிக்கக் குழு அரசாங்க அதிகாரிகளை உடன் அழைத்துக்கொண்டு அரசாங்கம் காட்டுகின்ற இடங்களுக்குச் சென்று விசாரிக்கவில்லை என்பதும், வேறு இடங்களுக்குச் சென்று விசாரித்தார்கள் என்பதுதான் அரசாங்கம் சொல்லும் குற்றச்சாட்டுகளே ஒழிய, அவர்கள் கூறியிருப்பது உண்மைக்கு புறம்பானது அல்ல என்பதை அரசாங்கம் ஒப்புக் கொள்கிறதா?

கனம் திரு. வெ. ராமைய்யா: நாங்கள் இந்த வாதத்தை எல்லாம் சொல்லவில்லை. சாதாரணமாக இது போன்ற விஷயங்களில் விவரங்களை சேகரித்துவிட்டு அறிக்கை சமர்ப்பிக்கும் போது, அங்குள்ள எல்லா நிலவரத்தையும் தெரிந்துகொள்வது மிகவும் பொருத்தமாக இருக்கும். அந்த ஜில்லாவில் லாண்ட் ரிபார்ம்ஸ் எல்லாம் எப்படியிருக்கிறது, என்னென்ன முறையில் நடந்துகொண்டிருக்கிறது என்பதைப்பற்றியும் விசாரிக்க வேண்டும். இந்தச் சட்டசபையிலுள்ள மற்றக் கட்சி அங்கத்தினர்களைக் கேட்டால் கூட, நல்ல முறையில் முன்னேற்றம்

அடைந்து வருவதைப்பற்றி சொல்வார்கள். அப்படி எதுவும் இல்லாமல், ஒரு சில கிராமங்களுக்கு மட்டும் சென்றுவிட்டு, தற்செயலாக அங்கங்கே கண்டவர்களிடம் ஏதோ கேட்டுவிட்டு முடிவு செய்வது அங்குள்ள உண்மையான விவரங்களுக்கு பொருத்தமாக இராது என்பதுதான் அரசாங்கத்தினுடைய கருத்து.

திரு. எம். தண்டாயுதபாணி : இந்தத் தீவிர சாகுபடி திட்டம் தஞ்சை ஜில்லாவில் அமல் நடத்தப்பட்டு அங்கு உற்பத்தியும் இரண்டு மடங்காக பெருகியிருக்கிறது. இதற்கான போர்ட் பவுன்டேஷன் ஸ்தாபனத்தாரின் ரிப்ரஸன்டேட்டிவ் ஒருவர் தஞ்சை ஜில்லாவிலேயே இருக்கிறார். இன்னும் நல்லமுறையில் பலன் அளிக்கக்கூடியவகையில் இன்னும் பல இடங்களுக்கு இந்தத் திட்டத்தை விஸ்தரிக்கப் படாமல் இருக்கிறது. ஆகவே, இந்த நிபுணர் கொடுத்த அறிக்கையினால் எதுவும் பாதிக்கப்படாதவாறு இந்தத் திட்டம் மேலும் விஸ்தரிக்கப்படுமா ?

கனம் திரு. வெ. ராமையா : தஞ்சை ஜில்லாவில் தீவிர சாகுபடித்திட்டம் வந்த பிறகு உற்பத்தி அதிகமாகிறது. மேலும் இதை அதிகப்படுத்தவேண்டும் என்று முயற்சி எடுக்கப்பட்டுவருகிறது. போர்ட் பவுன்டேஷனிலிருந்து பல நிபுணர்களை அனுப்பி எப்படி இந்தத் திட்டம் நடைபெற்றுக்கொண்டிருக்கிறது என்று அவர்களும் கண்காணித்துக்கொண்டிருக்கிறார்கள். அதைப் பார்த்து அங்குள்ள நிபுணர்கள் வேண்டிய ஊக்கத்தையும் உதவியையும் கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். ஆக, பொதுவாக இதை விஸ்தரிப்பது பற்றியும் அரசாங்கம் ஆலோசனை செய்துகொண்டிருக்கிறது. பொதுவாக இந்தத் திட்டம் முறையாக நடைபெறுகிறது என்பதை எல்லோரும் ஒப்புக்கொள்வார்கள்.

திரு. அ. ராமச்சந்திர ராயர் : சார், தஞ்சையில் தீவிர சாகுபடித் திட்டத்தை நடத்துவதுபோல், தென்னாற்காடு ஜில்லாவில் சிதம்பரம் தாலுகாவிலும் இந்தத் திட்டத்தை ஆரம்பிப்பதற்கு சர்க்கார் முன்வருமா ? வருமென்றால் எப்பொழுது ஆரம்பிக்கப்படுமென்பதை அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. வெ. ராமையா : இதற்கு தனிக் கேள்வி வேண்டும்.

டாக்டர் பா. நடராஜன் : ஸார், பொறுப்பற்ற முறையில் இந்த பேராசிரியர் உல்ஃப் லடிஜின்ஸ்கி இப்படி இதற்கு முன்பும் மத்திய அரசாங்கத்திற்கு ஒரு அறிக்கை கொடுத்திருக்கிறார். அதன்பேரில் எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்பது அரசாங்கத்திற்குத் தெரியுமா ?

கனம் திரு. வெ. ராமையா : தெரியாது.

திரு. எம். டி. தியாகராஜ பிள்ளை : இந்தத் தீவிர சாகுபடி திட்டத்தின்கீழ் பணம் வாங்குவதற்கு கூட்டுறவு சொஸைட்டிகளுக்குப் போக வேண்டியிருக்கிறது. இதனால் காலதாமதம் ஏற்படுகிறது. சொசைட்டிகளுக்கு ஓவர் ட்யூஸ் இருந்தால் பணம் கிடைப்பதற்கு கஷ்டம் இருக்கிறது. ஆகவே இந்தப் பணம் கிடைப்பதற்கு வேறு ஏதாவது மாற்று ஏற்பாடுகளை அரசாங்கம் செய்யுமா ?

கனம் திரு. வெ. ராமையா : இந்தத் தீவிர சாகுபடித் திட்டத்தைப்பற்றி கண்காணிப்பதற்கு ஸ்டேட் லெவலில் கமிட்டி இருக்கிறது. அதில் அங்கங்கு இருக்கின்ற கஷ்டங்களைத் தெரிவித்தால் அதைப் பரிசீலித்து அந்த முறைகளை நீக்குவதற்கு ஏற்பாடு செய்து, துரிதமாக அந்தக் கஷ்டங்களை நீக்குவதற்கு வழி செய்வார்கள்.

திரு. எ. கோ. பாலகிருஷ்ணன் : இந்தக் குழுவினர் அவசரப்பட்டு அரசாங்கத்திற்கு ரிப்போர்ட் கொடுத்துவிட்டார்கள் என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அதை அரசாங்கம் தவறு என்று கருதினால் மறுபரிசீலனை செய்வதற்கு ஏதாவது ஏற்பாடு செய்யுமா ?

கனம் திரு. வெ. ராமையா : இதற்காக தனியாக குழு வர வேண்டும் என்பதில்லை. இதைப்பற்றி அரசாங்கம் தொடர்ந்து பரிசீலனை செய்துகொண்டுதான் இருக்கிறது. அந்த நிபுணர் என்னென்ன முறையில் அவசரப்பட்டு ரிப்போர்ட் கொடுத்துவிட்டார் என்பதற்கான காரணங்களை நாமும் எடுத்து சொல்லியிருக்கிறோம். இதற்கான சட்டசபை கேள்வியில் பிரஸ் நோட் தேதி முதலியவைகளை நாம் கொடுத்திருக்கிறோம்.

திரு. கோ. சி. மணி : அந்த குழு அரசாங்கத்தின் அதிகாரிகளினுடைய துணை எதுவும் இல்லாமல் பரிசீலனை செய்ததாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அந்தக் குழு அங்கு வந்த போது 50, 60 ஜீப் கார்கள் 'கெவர்ன்மெண்ட் ஆஃப் மட்ராஸ்' என்று போட்ட ஜீப் கார்கள் போய்கொண்டிருந்தன. அப்படியானால் அந்தக் கார்களை எல்லாம் அவர்களாகவே எடுத்துக் கொண்டார்களா ? அல்லது அதில் நமது அதிகாரிகள் போனார்களா ? இது பற்றி அரசாங்கத்திற்குத் தெரியுமா ?

கனம் திரு. வெ. ராமையா : பரிசீலனை செய்யவேண்டும் என்று யாராவது நமது ராஜ்யத்திற்கு வரும்போது, அவர்களுக்கு வேண்டிய உதவியை நமது அரசாங்கம் செய்து கொடுக்கும்.

திரு. ஆ. கு. சுப்பையா : தீவிர சாகுபடித் திட்டம் சரியாக நடைபெறவேண்டுமென்றால், சரியான வடிகால் வேண்டும். வடிகால்கள் நல்ல முறையில் இல்லாததின் காரணமாக பல இடங்களிலும் இந்தத் திட்டம் சரியான முறையில் செயல்படுத்த முடியாத நிலையில் இருக்கிறது. ஆகவே போர்ட் பவுன்டேஷன் நிதியிலிருந்து வடிகால் திட்டத்தை அமல் நடத்துவதற்கு அரசாங்கம் முயற்சி எடுக்குமா ?

கனம் திரு. வெ. ராமையா : போர்ட் பவுண்டேஷன் நிதியிலிருந்து எடுத்து பயன்படுத்துவதா அல்லது ராஜ்ய நிதியிலிருந்து எடுத்து பயன்படுத்துவதா என்கின்ற சர்ச்சை செய்யாமல், எப்படியும் வடிகால் பிரச்னையைத் தீர்க்கவேண்டும் என்பதுதான் அரசாங்கத்தின் நோக்கம். அதற்காக ஒன்றிரண்டு வருடங்களாக நம்முடைய எஞ்சினியர்கள் நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கிறார்கள். அமெரிக்க நிபுணர்களும் இதைப் பார்த்துவிட்டு

30th March 1965]

பல ஆலோசனைகளைச் சொல்லியிருக்கிறார்கள். இருக்கின்ற கிரௌன்ட் வாட்டர்ஸை எப்படி பயன்படுத்துவது என்பதற்கும், சரியான முறையில் வடிகால்களை அமைப்பதற்கும் தனியாக ஒரு சூப்பரிண்டென்டிங் எஞ்சினியரை நாம் போட்டிருக்கின்றோம். பொதுவாக இருக்கின்ற நமது பாசன ஆதாரங்களை எல்லாம் எப்படி பயன்படுத்திக்கொள்வது என்பதைப்பற்றி பரிசீலனை செய்வதற்காக கனம் மத்திய அமைச்சர் ராவ் அவர்கள் சொன்ன ஆலோசனையின் பேரில் 'பைலட்' ஸ்கீமை இரண்டொரு இடங்களில் நமது ராஜ்ய அரசாங்கம் ஏற்பாடு செய்திருக்கிறது.

Damage caused by cyclone on 23rd and 24th December 1964

*375 Q.—SRI V. SANKARAN : SRI C. KOTHANDARAMA BAGAVATHAR : SRI K. CHEEMAICHAMY : SRI K. NARAYANASWAMI PILLAI : Will the Hon. the Minister for Food be pleased to state—

(*a*) the extent of damages to the property or loss of lives that occurred in the districts of Ramanathapuram and Madurai due to the cyclone on 23rd and 24th December 1964; and

(*b*) the relief rendered thereon ?

THE HON. SRI V. RAMAIAH : (*a*) & (*b*) A statement [a] is placed on the table of the House.

திரு. வை. சங்கரன் : ஸார், நமது ராஜ்யத்தினுடைய கிழக்குப் பகுதி கடலிலே, அடிக்கடி ஆண்டுதோறும் புயல் அடிக்கக்கூடிய நிலையும், கடல் கொந்தளிப்பு ஏற்படக்கூடிய நிலையும் இருப்பதால் கிழக்குக் கடற்கரையில் கடலரிப்பு ஏற்படாமல் தடுக்க, ஒரு திட்டத்தை ஏற்படுத்த அரசாங்கம் முற்படுமா ?

கனம் திரு. வெ. ராமைய்யா : கடற்கரையைப் பலப்படுத்த வேண்டுமென்று சொல்லுகிறார். அதற்கு வேண்டிய முறையில் எங்கெங்கு மண் அரிப்பு இருக்கிறதோ, அலைகளால் எரோஷன் ஏற்படுகிறதோ, எங்கெங்கு தடுப்புச்சுவரோ அல்லது பெரிய பெரிய ஏற்பாடுகளோ செய்யவேண்டுமோ அதையெல்லாம் அரசாங்கம் செய்துகொண்டிருக்கிறது. ஆனால் தடுப்புச் சுவர் கட்டினால் புயலைச் சமாளிக்க முடியும் என்பது நடக்காத காரியம் என்று சொல்லிக்கொள்கிறேன்.

திரு. எஸ். முருகையன் : ஸார், மேஜை மேல் வைத்திருக்கிற அறிக்கையில் பாதிக்கப்பட்ட மீனவர் குடும்பங்களைப்பற்றிச் சொல்லப்பட்டிருக்கிறது ; பாதிக்கப்பட்ட ஹரிஜனக் குடும்பங்கள் எத்தனை ? அவர்களுக்கு விசேஷச் சலுகை கொடுக்கப்பட்டிருக்கிறதா ? இல்லையென்றால், இனியாவது கொடுக்க அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா ?

கனம் திரு. வெ. ராமைய்யா : அந்தப் பகுதியைப் பார்த்தால் அதிகமாக பாதிக்கப்பட்டவர்கள் கடற்கரை ஓரத்தில் இருக்கிற மீனவர்கள். ஆகையால் அவர்களுக்குத் தேவையான எல்லாவித

a Printed as Appendix III on pages 543–545 infra